தினமலர்
நாகர்கோவில் | புதன் | 12.4.2023

# உலக ஓமியோபதி தினம்


**குலசேகரம், ஏப். 12–**
குலசேகரம் சாரதா கிருஷ்ணா ஓமியோபதி மருத்துவ கல்லூரியில் உலக ஓமியோபதி தினம் கொண்டாப் பட்டது.

ஓமியோபதி மருத் துவத்தின் தந்தை என அழைக்கப்படும் சாமு வேல் ஹனிமனின் நினைவு தினம் உலக ஓமியோபதி தினமாக கடைபிடிக்கப்படு கிறது. இதை ஒட்டி குலசேகரம் சாரதா கிருஷ்ணா ஓமியோபதி மருத்துவக் கல்லூரி யில் நடந்த நிகழ்ச் சிக்கு கல்லூரி தலைவர் டாக்டர் சி.கே.மோகன் தலைமை வகித்தார்.

கல்லூரி ஆலோசகர் டாக்டர் ரவி எம்.நாயர் கொடியேற்றி தொடங்கி வைத்தார். தொடர்ந்து கல்லூரி வளாகத்தில் உள்ள சாமுவேல் ஹனிமனின் திருவுருவ சிலைக்கு மாலை அணி விக்கப்பட்டது.

கோட்டயம் தேசிய ஓமியோபதி ஆராய்ச்சி நிலைய முதல்வர் சித்தார்த்தன் நினைவு ரையாற்றினார். திரு நெல்வேலி வைகறை ஓமியோபதி மற்றும் ஆராய்ச்சி நிலைய செய லாளர் துரைராஜ் சிறப்பு ரையாற்றினார்.

நிகழ்ச்சியில், கல் லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.



குலசேகரம் சாரதா கிருஷ்ணா ஓமியோபதி மருத்துவ கல்லூரியில் உலக ஓமியோபதி தின நிகழ்ச்சி நடந்தது.